**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.87/2020 தேதி- 24.02.2026
(DW.1) –ஜெயதாஸ்

**குறுக்கு விசாரணை யின் தொடர்ச்சி** -

1. நீதிமன்ற ஆணையர் இரண்டு முறை வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்த போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை C சொத்தை மட்டும் நான் காட்டிக் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை C சொத்தின் வடக்கு பக்கமும், தெற்கு பக்கமும் நான் காட்டிக் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை C சொத்தின் வடக்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கம் ஏழு வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன வீட்டிற்கு எந்த பக்கம் வழிப்பாதை செல்கிறது மற்றும் கேட் அமைக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையர் தனது வரைப்படத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அனைத்து வீடுகளுக்கும் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டுள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்த போது தடுப்பு சுவர் இல்லை, வடக்கு பக்கம் உள்ள என்னுடைய வீட்டிற்கும், என் அண்ணனுடைய வீட்டிற்கும் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

3. வழக்கு பட்டிகை C சொத்தின் வழியாக சுமார் 100 நபர்கள் சென்று வருகிறார்கள் என்றால் இல்லை, என்னையும், என் அண்ணனையும் மற்றும் அவகாசம் கொடுத்த 6 வீடுகள் தவிர வேறு யாரும் பயன்படுத்தவில்லை. மேற்சொன்ன ஆறு நபர்களின் வீட்டின் விசேஷத்திற்கு சுமார் 500 க்கும் அதிகமான நபர்கள் பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை A சொத்தின் ஒரு பகுதியில் கேட் அமைக்கப்பட்டு மற்ற பகுதியில் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் கேட் இல்லை, முள்வேலி மட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

4. வழக்கு பட்டிகை A சொத்தில் கால்நடைகள் மற்றும் வேறு நபர்கள் உபயோகப்படுத்துவர்கள் என்பதால் தான் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்சொன்ன முள்வேலி நான் அமைத்ததாகும். வழக்கு பட்டிகை

A சொத்தில் முள்வேலியை நான் அமைத்ததாகவும், பயன்படுத்தி வருவதாகவும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை A சொத்தில் உள்ள கேட்டை எப்போதும் வாதி திறந்து பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

5. வழக்கு பட்டிகை A சொத்தில் அமைக்கப்பட்டுள்ள முள்வேலி மற்றும் கேட் அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்திற்கு உள்ளே தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல வழக்கு பட்டிகை C சொத்தில் தான் முள்வேலி அமைந்துள்ளது. வாதிகளுக்கு ஆவணப்படி 13 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் இருக்கலாம், ஆவணத்தை பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு வழக்கு பட்டிகை A சொத்து 12.817 சென்ட் நிலம் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் ஏற்கெனவே முள்வேலி அமைத்ததால் அதை பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்சொன்ன 12.817 சென்ட் சொத்து போக மீதயுள்ள 0.188 சென்ட் வழக்கு பட்டிகை C சொத்தில் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பாரா 14 முதல் 18 வரையான பாராக்களில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 3 சென்ட் சொத்து புறம்போக்கு நிலம் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7. மேற்சொன்ன 3 சென்ட் புறம்போக்கு நிலமானது கால்வாய் புறம்போக்கு என்று சொல்லியுள்ள நிலையில், அதற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, வாதிகள் 3 சென்ட் சொத்தை தான் B பட்டிகை சொத்தாக இந்த வழக்கில் காண்பித்துள்ளார்கள். B பட்டிகை சொத்தை குறித்து வாதிகள் எவ்வித பரிகாரமும் கோரப்படாததால் அரசை கட்சியாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல, யார் பெயரிலும் ஆவணம் இல்லாததால் அரசை தரப்பினராக சேர்க்க வேண்டும்.

8. வாதிகளின் A பட்டிகை சொத்தை தவிர்த்து, இதர சொத்துக்கள் நிறைய உள்ளது என்றால் சரிதான். இதர சொத்துகளில் தான் வாதியினுடையை சகோதர்களுடைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகள் அனைத்தும் சானல் ரோடு பார்த்து முகப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வாதியின் சகோதர்களுடைய 5 வீடுகள் உள்ள சொத்தின் ஒரு பகுதி தான் B பட்டிகை சொத்து என்றால் சரியல்ல. C பட்டிகை சொத்தை தவிர்த்து வழக்கு A பட்டிகை சொத்திற்கு சென்று வர வேறு வழிபாதை உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

9. மாற்று பாதை ஏதுபும் இல்லாததால் தான் நீதிமன்ற ஆணையர் மாற்று பாதை பற்றி எந்த குறிப்பும் தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, மாற்று பாதையை வரைபடத்தில் காண்பித்துள்ளார். நான் சொல்வது போல் மாற்று பாதையோ, நடைபாதையோ, பாலமோ உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், வரைபடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியது போல் மாற்று பாதை எதுவும் இல்லை என்றாலும், பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

10. வழக்கு C பட்டிகை சொத்து பொது பாதை என்பதால் வழக்கு A பட்டிகை சொத்திற்கு சென்று வர வாதிக்கு அனைத்து விதமான உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல, மேற்சொன்னவாறு எந்த பாதையும் பயன்படுத்தவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெற்கு எல்லையில் ஜெயதாஸ் மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, பாதை என்று குறிப்பிடப்படவில்லை. தற்போது தெற்கு பக்கம் உள்ள C பட்டிகை சொத்து பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல.

11. எனக்கோ, என்னுடைய ஆட்களுக்கோ வாதியின் பாதை உரிமையை தடை செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. 05.10.2020 இல் வாதியை பாதையை பயன்படுத்த தடை செய்ததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது பொய்யான சங்கதிதான். நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் வழக்கு C பட்டிகை சொத்து சம்மந்தமான ஆவணம் என்றாலும்,

அது வாதிக்கு சாதகமான ஆவணம் என்றால் C பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்டது என்பதால் அதை நிரூபிக்க தாக்கல் செய்துள்ளேன்.

12. வாதி வழக்கில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.